## DEPARTMENTAL TESTS — JULY, 2023

## SECOND CLASS LANGUAGE TEST IN MALAYALAM

### [Tamil to Malayalam]

[Time : 45 minutes

(Maximum marks : 100)

1. பின்வரும் பகுதியை மலையாளத்தில் மொழிபெயர்க்கவும் :

மனித வாழ்வின் இன்றியமையாத ஒன்று, தூய்மையான சுற்றுப்புறம் ஆகும். எவரொருவர் தான் வாழும் இந்த பூமியை தூய்மையாக் வைத்திருக்க சிறு முயற்சி செய்கிறாரோ, அவரே இன்றைய காலகட்டத்தின் சிறந்த மனிதராகப் போற்றப்படுகிறார். இயற்கை நமக்கு பல கொடைகளை வழங்கியுள்ளது தூய்மையான காற்று, தூய குடிநீர், சுகாதாரமான சுற்றுச்சூழல் என இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது, ஆனால் தற்போதைய சூழ்நிலையில் அறிவியல் வளர்ச்சி என்ற பெயரில் காற்று மாசு, நீர்மாசு, மண் மாசு என மனிதன் தன் சுயநலத்திற்காக இந்த பூமியின் வயிற்றில் தீராத காயத்தை ஏற்படுத்திவிட்டான், இதன் காரணமாக ஒருபோதும் இல்லாத அளவுக்கு இயற்கை பேரிடர்கள், தொற்றுநோய்கள் என மனிதனுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் செயல்கள் அரங்கேறத் தொடங்கிவிட்டன. இவற்றைக் கட்டுப்படுத்தி நாம் வாழும் இந்த பூமியை பாதுகாப்பதற்கான முதல்படி மாணவர்கள் தங்கள் வாழ்விடமான வீட்டையும் அதன் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல் வேண்டும். தாங்கள் கல்வி கற்று வரும் கல்வி நிறுவனங்களைத் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். ஊர் மக்களிடம் சுற்றுப்புறத் தூய்மையை வலியுறுத்தல் வேண்டும். ஊர்ப்புறங்களில் வைத்துள்ள குப்பைத் தொட்டிகளில் குப்பைகளைக் கொட்டுமாறு மக்களை அறிவுறுத்த வேண்டும்.